# இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)
# வெள்ளிக் கிழமை பிரசங்கம்
## 23 செப்டம்பர் 2016 / 21 துல்ஹஜ் 1437 ஹிஜிரி
## <u>அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதில் பொறுமையுடன் இருப்பது</u>

اَلْحَمْدُ لِلَّهِ الَّذِي عَزَّنَا بِالْإِسْلَامْ، وَاخْتَارَنَا مِنْ أُمَّةِ خَيْرِ نَبِيٍّ أُخْرِجَ فِي الْعَالَمْ، وَأَنْزَلَ عَلَيْهِ أَحْسَنَ الْكُتُبِ وَأَجَلَّ الْكَلَامْ، هُدًى وَرَحْمَةً لِلْأَنَامْ ، أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ، اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِيْنَ.

أَمَّا بَعْدُ، فَيَا أَيُّهَا الْمُسْلِمُوْنَ، أُوْصِيْكُمْ وَنَفْسِيْ بِتَقْوَى اللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தொடர்ந்து ”தக்வா” வுடன் (பக்தியுடன்) இருப்பதற்கு முயற்சிப்போமாக! அவனது கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்போமாக! அவன் நமக்குத் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்தும் தவிர்ந்து கொள்வோமாக! நமது உள்ளங்களில்

காணப்படும் "தக்வா" அல்லாஹ் நம்மீது பொழிந்துள்ள கிருபை மற்றும் அருள்களால் மலரட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

கடந்த சில வாரங்களாக, வெள்ளிக்கிழமைப் பிரசங்கங்களில் நமது வாழ்க்கைக்குத் தேவையான அவசியப் பண்பாகிய "ஸப்ர்" (பொறுமையைப்) பற்றி விவாதிக்கப்பட்டது. நமது வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சோதனைகளை -அவை எவ்வளவு தான் கஷ்டமானவையாக, வேதனை தரக்கூடியதாக இருப்பினும்- எதிர்கொள்வதில் பொறுமையைக் கடைப்பிடிப்பதால் கிடைக்கும் பலன்களைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

எனினும், ஜமாஅத்தார்களே! "ஸப்ர்" என்பது சவால்கள் மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்ளும் போது மட்டும் கடைப்பிடிக்க வேண்டிய விஷயமல்ல. அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பது மற்றும் அவனை வணங்கி வழிபடுவதிலும் ஒவ்வொரு முஸ்லிமுக்கு அது அவசியமாக உள்ளது. காரணம், அல்லாஹ் மனிதகுலத்தை ஆசைகள், அதாவது, நஃப்சுகளுடன் கூடிய படைப்பாகப் படைத்துள்ளான். அந்த ஆசைகள் இன்பம் தரக்கூடிய செயல்களில் ஈடுபடுமாறு மனிதர்களைத் தூண்டுவதுடன், அவர்களின் பொறுப்புகள் மற்றும் கடமைகளைப் புறக்கணிக்குமாறும் அவர்களைத் தூண்டுகிறது. எவர்கள் தமது நஃப்சுகளை (ஆன்மாக்களை) கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவில்லையோ அவர்கள் தம்மை முஸ்லிம்கள் எனக் கூறிக் கொண்ட போதிலும், அவர்களை, அவர்களின் நஃப்சுகள் இறை நம்பிக்கையை விட்டும் அகற்றி விட வாய்ப்புள்ளது.

எனவே, ஜமாஅத்தார்களே!

நமது ஆசைகளைப் பணிய வைத்து, தொடர்ந்து அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடப்பவர்களாக நம்மை ஆக்குவதற்கு, நமது உட்புற சக்தியாக உள்ள "ஸப்ர்" ரை வளர்த்துக் கொள்வது அவசியமாக உள்ளது. அவ்வாறு செய்யவில்லையெனில், நமது "ஈமான்" (ஓரிறை நம்பிக்கை) பரிபூரணமாக ஆகாது என ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் பின்வருமாறு நவின்றுள்ளார்கள்:

لاَ يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى يَكُونَ هَواهُ تَبَعًا لِمَا جِئْتُ بِهِ

பொருள்: உங்களில் எவரும் - அவரது மனோ இச்சைகள் - நான் எதைக் கொண்டு வந்துள்ளேனோ அதனை விரும்பிப் பின்பற்றாத வரை, உண்மையான ஓரிறை நம்பிக்கையாராக (முஃமின்) ஆக மாட்டார். (அல்-ஜாமிவுஸ் ஸஹீஹ்)

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

"ஸப்ர்" ரைப் பற்றி இங்கு நாம் விவாதிக்கும் நிலையில், "சோதனைகளை எதிர்கொள்ளும் போது கடைப்பிடிக்கப்படும் "ஸப்ர்" ரை விட அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் கடைப்பிடிக்க வேண்டிய "ஸப்ர்" தான் மிகவும் அவசியமானது" என மார்க்க அறிஞர்கள் (உலமா) வலியுறுத்திக் கூறியுள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும். காரணம்,

சோதனைகளை எதிர்கொள்ளும் போது ”ஸப்ர்” ரைக் கடைப்பிடிப்பவர்கள் தமது சொந்த சக்தியைச் சார்ந்திருக்க வேண்டியதுள்ளது. ஆனால், அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள், பிரபஞ்சத்தின் அதிபதியாகிய வல்லமைமிக்க அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவையே சார்ந்திருப்பது அவசியமாக உள்ளது.

அல்லாஹ்வின் உண்மையான அடியாராக இருப்பதில் ”ஸப்ர்” ரைக் கடைப்பிடிப்பவர்களின் உள்ளங்களில், வாழ்க்கையில் ஏற்படும் எவ்வித சோதனைகளையும் எதிர்கொள்வதற்குத் தேவையான உறுதியான ”ஈமான்” நிச்சயம் வழங்கப்படும். ஆனால், வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்வதில் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்களிடம் அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதில் ”ஸப்ர்” இருக்கும் எனக் கூற இயலாது. எனவே தான், வாழ்க்கையின் தமது நோக்கங்களை அடைவதற்காக வாழ்க்கையின் எவ்வித சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றுள்ள சிலரால், தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஐந்து நிமிடங்களைக் கூட செலவழித்து பொறுமையைக் கடைப்பிடிக்க முடிவதில்லை. சிலர், அதிகமான வேலைப் பளுக்களின் காரணமாக அலுவல்மிக்கவர்களாக இருக்கும் போது பசி, தாகத்தைச் சகித்துக் கொள்கிறார்கள்; அவ்வேலைகளை முடிக்காமல் அவர்கள் உண்பதோ, குடிப்பதோ இல்லை. ஆனால், அவர்களால் ரமதான் மாத நோன்பைக் கூட நோற்க முடிவதில்லை.

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!

நம்மைப் படைத்த அல்லாஹ்வுக்கு நமது அடிமைத்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளும் அடையாளமாக, அல்லாஹ்வை வணங்கி வழிபடுவது நமது கடமையாகும். எனினும், நமது சக்தியை மிகைக்கும் எவ்வித கடமையையும் அல்லாஹ் நமக்கு சுமையாக ஏற்படுத்துவதில்லை. உண்மையில், ரமதான் மாதத்தில் நோன்பு நோற்பதை நம்மீது கடமையாக்கியுள்ளதன் மூலம் அல்லாஹ் நம்மைக் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. இதனை திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 185-வது வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு விவரிக்கின்றான்:

يُرِيدُ ٱللَّهُ بِكُمُ ٱلْيُسْرَ وَلَا يُرِيدُ بِكُمُ ٱلْعُسْرَ وَلِتُكْمِلُوا۟ ٱلْعِدَّةَ وَلِتُكَبِّرُوا۟ ٱللَّهَ عَلَىٰ مَا هَدَىٰكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُونَ

பொருள்: அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை; குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே (அல்லாஹ் இதன் மூலம் நாடுகிறான்).

அல்லாஹ் நம்மீது கடமையாக்கியுள்ள வணக்க வழிபாட்டுச் செயல்கள் அனைத்தும் நிறைவேற்றுவதற்கு இலகுவானது என்ற கருத்து உண்மையாக இருந்தால், பலர் அவ்வணக்க வழிபாடுகளை நிறைவேற்றத் தவறுகிறார்களே அதற்குக் காரணமென்ன? எனச் சிலர் கேட்கலாம். அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதில் "ஸப்ர்" ரைக் கடைப்பிடிப்பதில் உள்ள குறைபாடு தான் இதற்குக் காரணமாகும். அக்குறைபாடு ஆன்மாக்களைப் பலஹீனமாக்கி விடுகிறது. அதன் காரணமாக, இன்பம் அனுபவிக்கத் தூண்டும் தனது ஆசையை அவரால் மறுக்க முடியாமலாகி விடுகிறது. இப்படிப்பட்ட தனிநபர்கள் தான், அல்லாஹ்வின் கட்டளைகளை தம்மால் நிறைவேற்ற முடியவில்லையே என உணர்வார்கள். மேலும், அவர்கள் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடக்க முயற்சிப்பதற்குப் பதிலாக சாக்குப் போக்குச் சொல்ல முற்படுவர். அப்படியே அவர்கள் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றினாலும் ஆர்வமில்லாமல் நிறைவேற்றுவார்கள். சில நேரங்களில், அவர்களின் உள்ளங்கள் வெறுப்புகளால் நிறைந்து காணப்படும். அவர்களின் நாவுகள் தொடர்ந்து புலம்பிக் கொண்டே இருக்கும். இது "முனாஃபிகீன்கள்" எனப்படும் நயவஞ்சகர்களின் தன்மைகளைப் போன்றதாகும். அல்லாஹ் இதனைப் பற்றி திருக்குர்ஆனின் "அன்னிஸாவு" எனும் அத்தியாயத்தின் 142-வது வசனத்தில் பின்வருமாறு கூறுகின்றான்:

إِنَّ ٱلْمُنَٰفِقِينَ يُخَٰدِعُونَ ٱللَّهَ وَهُوَ خَٰدِعُهُمْ وَإِذَا قَامُوٓا۟ إِلَى ٱلصَّلَوٰةِ قَامُوا۟ كُسَالَىٰ يُرَآءُونَ ٱلنَّاسَ وَلَا يَذْكُرُونَ ٱللَّهَ إِلَّا قَلِيلاً

பொருள்: நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர்; ஆனால் அவன் அவர்களை வஞ்சித்து விடுவான்; தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் - மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்); இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை.

இவ்விஷயத்தை, இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் முன்மாதிரியான நடத்தையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! அவர்கள் அல்லாஹ்வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மிகச் சிறந்த மனிதப் புனிதராக இருந்தார்கள். அல்லாஹ்வின் பாதுகாப்பு மற்றும் சொர்க்கத்தைக் கொண்டு வாக்களிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். ரசூலுல்லாஹி(ஸல்) அவர்களின் இந்த உயர்வான நிலை, வணக்க வழிபாட்டுச் செயல்களை தரக்குறைவாக நினைக்கும் படியோ அல்லது அவற்றை நிறைவேற்றுவதில் அக்கறையற்றவர்களாக ஆகும் படியோ அவர்களைத் தூண்டவில்லை. மாறாக, அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதில் முழு மனதுடன், ஆர்வத்துடன் அவர்கள் செயல்படுவதற்குக் காரணமாக இருந்தது. இது நம்மை வெட்கப்பட வைக்கும் விஷயமல்லவா? நாம் பல தவறுகளையும் பாவங்களையும் செய்கின்றோம். அந்த அளவுக்காவது அல்லாஹ்வுக்கு நாம் கட்டுப்பட்டு நடப்பதில்லையே! நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இரவின் மத்திய பகுதியில் தனது கால்கள் வீங்கி, கொப்புளங்கள் ஏற்படும் அளவுக்கு தொழுகையில் ஈடுபட்டு வந்தார்கள். ரமதான் மாதத்தைத் தவிர, மற்ற மாதங்களிலும் கூட அடிக்கடி நோன்பு நோற்றார்கள். ஒவ்வொரு நாளும் குறைந்தது 70 தடவைகள்

அல்லாஹ்விடம் ”இஸ்தி:ஃபார்” (பாவமன்னிப்பு) தேடினார்கள். மேலும், ரசூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் தாராள மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் செல்வந்தராக இருக்கவில்லையென்றாலும் தன்னிடமுள்ள செல்வத்தை மற்றவர்களுக்குக் கொடுக்கத் தயங்காதவர்களாகவும், தன்னிடமுள்ள குறைவான பொருளையும் தேவைப்பட்டவர்களுக்குக் கொடுப்பவர்களாகவும் இருந்தார்கள். இஸ்லாத்தின் தூதை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பதிலும், சமுதாய விவகாரங்களைக் கவனிப்பதிலும் அதிக அலுவல்மிக்கவர்களாக அவர்கள் இருந்தும் கூட, குடும்பத் தலைவர் எனும் ரீதியில் குடும்பக் கடமைகளையும் வேலைகளையும் ஆர்வத்துடன் செய்தார்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் நன்னடத்தையை ஆர்வத்துடன் பின்பற்றும் உம்மத்தாக (சமுதாயமாக) ஆகுவதற்கு கடின முயற்சி செய்வோமாக! அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கும் அவனது திருப்தியைப் பெறுவதற்கும் நமது உள்ளங்களில் ”ஸப்ர்” ரை வளர்த்துக் கொள்வோமாக! எவர்கள் உலக விவகாரங்களில் அதிகக் கவனம் செலுத்தி, அல்லாஹ்வுக்கான வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதில் பலஹீனமானவர்களாக உள்ளார்களோ அவர்களில் நின்றும் ஆக வேண்டாம். அல்லாஹ், திருக்குர்ஆனின் ”மர்யம்” எனும் அத்தியாயத்தின் பின்வரும் 65-வது வசனத்தில் கூறும் கருத்துக்களில் சிந்தனை செய்யுங்கள்:

رَّبُّ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضِ وَمَا بَيۡنَهُمَا فَٱعۡبُدۡهُ وَٱصۡطَبِرۡ لِعِبَٰدَتِهِۦۚ هَلۡ تَعۡلَمُ لَهُۥ سَمِيّٗا

பொருள்: "(அவனே) வானங்களுக்கும், பூமிக்கும், அவை இரண்டிற்குமிடையே உள்ளவற்றிற்கும் இறைவனாக இருக்கின்றான். ஆகையினால் அவ(ன் ஒருவ)னையே வணங்குவீராக! மேலும், அவனை வணங்குவதில் (கஷ்டங்களையேற்றுப்) பொறுமையுடன் இருப்பீராக! (பெயரில், வல்லமையில், மற்றும் தன்மைகளில் அல்லாஹ்வுக்கு) நிகரானவனை நீர் அறிவீரா?"

மேற்கண்ட வசனத்தில், அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடப்பதில் பொறுமையைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை அல்லாஹ் விளக்குகிறான். காரணம், அவன் தான் பிரபஞ்சத்தின் அதிபதியாக உள்ளான்; அவனைப் போல் சக்திமிக்கவன் எவனுமில்லை. அனைத்து படைப்புகளுக்கும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவைத் தவிர வேறு எவராலும் "ரிஸ்க்" (வாழ்வாதாரம்) வழங்க இயலாது.

உங்களின் மனோ இச்சைகள் அல்லது நஃப்ஸ் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதிலிருந்து உங்களைத் திசை திருப்புவதாக நீங்கள் அறிந்தால், உங்களை நோக்கி நீங்கள்: அல்லாஹ் உனக்கு வழங்கியுள்ள அனைத்து அருட்கொடைகளையும் அல்லாஹ் எடுத்துக் கொண்டால் உன்னால் தொடர்ந்து நிம்மதியாக வாழ முடியுமா? எனக் கேளுங்கள். உங்களது "நஃப்ஸ்" அல்லாஹ்வை வணங்கி வழிபடுவதிலிருந்து உங்களைத் திசை திருப்புவதாக நீங்கள் அறிந்தால், அதை நோக்கி நீங்கள்: தீர்ப்பு நாளன்று

அல்லாஹ்வின் சொர்க்கத்தில் ஒரு இடம் பிடிப்பதில்  நீ தோல்வியைத் தழுவினால், அதனால் ஏற்படும் வேதனையை உன்னால் சகித்துக் கொள்ள முடியுமா? எனக் கேளுங்கள். உங்களின் "நஃபஸ்" உங்களை அல்லாஹ்வின் தடைகளை மீறிச் செயல்படுமாறு தூண்டுவதாக நீங்கள் உணர்ந்தால், அதை நோக்கி: நரகத்தில்  நீ தண்டிக்கப்படும் போது உன்னால் பொறுக்க முடியுமா? எனக் கேளுங்கள்.

எனவே, ஜமாஅத்தார்களே!  நரகத்தில் நாம் வேதனையை அனுபவிக்க நேரிட்டால், அல்லது மறுமையில் அல்லாஹ்வின் சொர்க்கத்தில் இடம் பிடிக்கத் தவறினால், அல்லது அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள அனைத்து அருட்கொடைகளையும் நாம் இழக்க நேரிட்டால், நம்மால் "ஸப்ர்" செய்ய முடியாது என்பதை நாம் உணர்வோமேயானால், நம்மைப் படைத்த அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் நாம் "ஸப்ர்" செய்வது அவசியமாகும்.

அல்லாஹ் நமக்குத் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களையும் புறக்கணித்து விடுங்கள்! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதில் ஆர்வமாக இருங்கள்! உங்களின் உள்ளங்களை உறுதியாக்குங்கள்! நமது கடமைகளையும் பொறுப்புகளையும் புறக்கணிக்காதீர்கள்! வணக்க வழிபாடுகளை அல்லாஹ்வுக்காக மட்டும் நிறைவேற்றுவதில் நேர்மையாக இருங்கள்! அவற்றை முடிந்த அளவு சிறப்பாக நிறைவேற்றுங்கள்! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் சோர்வடைந்து விட வேண்டாம். அல்லாஹ்விடம் துஆக் கேட்பதை விட்டு விட வேண்டாம்.  அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும் அவனுக்காக வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவதிலும் அல்லாஹ் நமக்கு "ஸப்ர்"

ரை வழங்கி அருள் புரிவானாக! இன்ஷாஅல்லாஹ். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمِ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.